சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு

# வலையில் சிக்கிய நரசிம்மர்

---

அடர்ந்த காடு. அழகாக கங்கை ஆறு அதனுள் சப்தத்துடன் பாய்ந்து ஓடுகிறது. எங்கும் பசுமை மயம் தான். அதோ வெகு அருகில் ஒரு மனிதக்கூட்டம்.

கூட்டத்தின் முன் குரு நடக்கிறார். அவரைப் பின் தொடர்ந்து அவரது மாணவர்கள். வாயார மனதார அவர்கள் பல ஸ்லோகங்களை அழகாக ராகத்துடன் சொல்லிக் கொண்டே போகிறார்கள்.நடக்கும் அலுப்பு தீரும், உடலும் மனமும் சக்தி பெறும், காட்டில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் விழிப்புணர்வு வரும், வெட்டிப்பேச்சும் நிற்கும்.

சற்று வெயில் கூட அனைவரும் நிழல் தேடினர். தொலைவில் சில வேடர்களின் குடிசைகள் தெரிகின்றன. அனைவரும் அங்கே செல்ல, வேடர்களும் மிக்க மரியாதையுடன் முன்வந்து இவர்களை மரியாதையுடன் வரவேற்றனர். வேடர் தலைவன் தேடலன்,"ஸ்வாமி! எங்கே போறீங்க? என்ன உதவி வேணுங்க? எங்களால முடிஞ்சத செய்யறோம்!" என்றான்.

குரு,"அப்பா! ரொம்ப நன்றி! நாங்க ஆந்திராவுல இருக்கிற அஹோபில மலைக்காட்டை நோக்கிப் போறோம்."

வேடர் தலைவன்,"ரொம்ப நல்லதுங்க, அங்க என்ன வேல சாமி?"

இதைக் கேட்ட மாணவர்கள் கொல் என்று சிரித்துவிட்டனர். உலகம் புகழும் அஹோபில ஷேத்ரம் பற்றித் தெரியாத மூடனாக வேடன் இருக்கிறானே என்று கேலி பேசினர்.

குரு,"சிரிப்பை விடுங்கள். இவர்கள் அஹோபிலத்தை அறியாமல் இருக்கும் போது அதைப் பற்றி சொல்ல வேண்டியது நம் கடமை, தர்மம்! அய்யா! அஹோபிலக் காட்டுக்குள் ஒன்பது கோயில்கள் உண்டு. அதில் ஒன்பது வித நரசிம்ஹ பெருமாள்கள் உள்ளனர்."

வேடர் தலைவன்,"நரசிம்மம் என்றால் என்ன சாமி?"

குரு,"நமக்குள் இருக்கும் விழிப்புணர்வு தான் அது. நான் தான் உலகத்தில் பெரியவன் என்று அப்போதும் ஆணவம் கொள்ளாமல் நாம் இருக்கும் நிலை தான் நரசிம்மம்."

"சரி சாமி வாங்க, எளிய விருந்து தரோம்! ஏத்துக்குங்க" என்று அவர்களுக்கு முடிந்த விருந்தோபச்சாரம் செய்தான்.

விருந்து நடந்து கொண்டு இருந்தது. வேடர் தலைவன் தேடலன் ஒரு மாணவன் அருகில் வருகிறான்,"தம்பீ! நரசிம்ம பெருமாள் பற்றி எனக்குச் சொன்ன உங்க குருவுக்கு ஏதாவது குருதட்சிணை வைக்கனும். என்ன தரட்டும்!"

இதைக் கேட்டு அவன் மிக்க கேலியுடன் மனதில் நினைக்கிறான்.
"குரு தட்சிணை, இவன் தரானாம்!இவனை ஒரு கை பார்க்கனும்"என்று விளையாட்டாய்," தேடலா! குருவுக்கு நரசிம்மர்னா ரொம்பப் பிடிக்கும், அதைக் கொண்டு வா!"

தேடலன்,"அது எப்படி இருக்கும் தம்பீ?"

மாணவன்,"ம் அது பாதி மனுஷன், சிங்கத்தலையுடன் இருக்கும், போ போய்க் கொண்டு வா!"

தேடலன், "ரொம்ப சந்தோஷம்! ஆனா அப்படி ஒன்று இக்காட்டுக்குள் இல்லையே! சரி எப்படியும் தேடி வருகிறேன். குருதட்சிணை தராமல் பாவம் பண்ண முடியுமா?" என்று காட்டுக்குள் சென்று விட்டான். குருநாதரும் தன் கூட்டத்துடன் பயணத்தைத் தொடர்ந்தார். நாட்கள் செல்கின்றன.

அஹோபிலம் வந்து விட்டது. ஒரே மழைக்காலம் வேறு. பயணம் மிகக் கடுமை! ஒவ்வொரு கோயிலாக மொத்தம் ஒன்பது சன்னிதிகளுக்கு அல்லவா பயணம் செய்ய வேண்டும்? இடையில் குருவுக்கு விஷக்காய்ச்சல் வர மேற்கொண்டு பயணிக்க முடியாமல் தவிப்புடன் ஒரு இடத்தில் தங்கினர். மழையும் விட்ட பாடில்லை.

மழை ஊற்றிக் கொண்டு இருக்க, யாரோ காட்டுக்குள் வருகிறார்கள். எதையோ மூட்டை கட்டி இழுத்தபடி வருகிறார்கள்.

அதோ அது யார்? தேடலன்.வேடர் குலத் தலைவன். இவர்களைக் கண்டதும்., சாமி, குருவே! இந்தாங்க குரு தட்சிணை!"

படுக்கையில் இருந்த குரு அவனை அடையாளம் கண்டு ஆர்வத்துடன், "வா தேடலா! என்ன தட்சிணை? எதற்கு தட்சிணை? நீ எப்படி இங்க?"

தேடலன்,"ஐயா! அஹோபிலம் பற்றி சொன்னீங்க, நரசிம்மம் பற்றி சொன்னீங்க, அதுக்கு குருதட்சிணை தரோம்! உங்க மாணவர் தான் உங்களுக்கு ரொம்ம பிடிச்ச ஒன்னக் கொண்டு வரச் சொன்னார் தான் கொண்டு வந்தேன்..."

"என்னப்பா அது?"

"ஐயா! நரசிம்மம், பாருங்க கொண்டு வந்திருக்கேன்!மழையுல நனையிது பாருங்க"

சிஷ்யர்கள் ஆடி அரண்டு பயந்து கத்த ஆரம்பித்தனர். சிலர் கேலியாய் சிரித்தனர்.

குரு மெதுவாக சற்றுக் கண்களை மூடி த்யானித்து எதையோ உணர்ந்தவராய் அவர்களை அடக்கிவிட்டு வெளியில் வருகிறார். மழையில் தேடலம் அருகில் பெரிய வலை. அனைவருக்கும் வலை மட்டும் தெரிய குருவுக்கோ அதனுள்ளே லக்ஷ்மியுடன் நரசிம்மர் தெரிய,

"தேடலா! என்னே உன் குரு பக்தி?! சதா உன் மனதில் நரசிம்ம உருவத்தை நினைத்துக் கொண்டு கள்ளம் கபடம் இல்லாமல் தேடிய உனக்கு அவர் பிடிபட்டுவிட்டாரே!"

"சாமி எல்லாம் உங்க அருள் தான்!"

"இல்லை அப்பா! உன் குரு பக்தியின் பலன் தான் இது!" என்று அவர் விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லி அவனையே விஷ்ணுவாக பாவித்து பூஜித்து நரசிம்ம தரிசனம் அஹோபிலத்தில் கண்டார். சிஷ்யர்களுக்கு ஏதும் புரியவில்லை. குருதட்சிணை பற்றி கேலிக்கூத்துடன் சொன்னவனுக்கு மட்டும் சற்று சிம்ம கர்ஜனை கேட்டது.தேடலனைப் போல தூய நம்பிக்கையில் குரு பக்தியுடன் இருந்தால் தெய்வம் நம் அன்பு வலைக்குள் சிக்கிக் கொள்ளும்.
தேடலனின் விழிப்புணர்வில் இருந்த இறைவனை குருவின் சிறிய தூண்டுதல் வெளிக்கொணர்ந்தது. அவனுள் இருக்கும் நரசிம்மனையே குருவும் தரிசித்தார்.

ஓம் நமோ நாராயணாய!